# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. 'க்' என்ற வல்லின மெய்யின் இன எழுத்து

அ) ஞ் ஆ) ண் இ) ந் ஈ) ங்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. புதியதொருவீடு நாடகத்தை எழுதியவர்

அ) மகாவி உருத்திரமூர்த்தி ஆ) சத்திமுற்றப்புலவர்
இ) தனிநாயகம் அடிகளார் ஈ) பொன்முடியார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தனிநாயகம் அடிகள் எழுதிய நூல்,

அ) குடும்பவிளக்கு ஆ) யாழ்நூல்
இ) தமிழர் வரலாறு ஈ) தமிழ்மறை விருந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அடுக்கிடுக்குத் தொடருக்கு எடுத்துக்காட்டு

அ) கதறிக்கதறி ஆ) மேலேமேலே
இ) அக்கம்பக்கம் ஈ) பென்னம்பெரிய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடலில் பாறை என்று குறிப்பிடப்படுவது

அ) நிலம் ஆ) குளம் இ) மலை ஈ) கடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது

அ) குடாநாடு ஆ) தீவு இ) பட்டினம் ஈ) நகரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. தாயின் தாலாட்டு என்ற பாடலைப் பாடியவர்

அ) மகாகவி ஆ) பொன்முடியார்
இ) இளங்கோவடிகள் ஈ) கபிலர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பொற்சிலை என்பது

அ) தோன்றற் புணர்ச்சி ஆ) திரிதற் புணர்ச்சி

இ) கெடுதற் புணர்ச்சி ஈ) இயல்புப் புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. எழுதினான் என்பதன் பகுதி

அ) எழுதி ஆ) எழுதிய இ) எழுது ஈ) எழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சத்திமுற்றப்புலவர் தூது விட்ட பறவை

அ) நாரை ஆ) கொக்கு இ) குயில் ஈ) அன்னம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய ஆண்டு

அ) 1521 ஆ) 1554 இ) 1619 ஈ) 1505

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கண் + புலன் என்பதைப் புணர்த்தினால்

அ) கட்புலன் ஆ) கண்புலன் இ) கட்ப்புலன் ஈ) கண்ப்புலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இலக்கிய வகையால் தமிழ்மொழியில் உள்ள சொற்கள்

அ) மூன்றுவகை ஆ) ஐந்துவகை இ) நான்குவகை ஈ) இரண்டுவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. **குறள்:-** அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

____________________ உரியர் பிறர்க்கு

அ) எண்பும் ஆ) என்பும் இ) என்றும் ஈ) என்னும்

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கற்றோரினால் மட்டும் பொருள் அறிந்து கொள்ளக் கூடிய இலக்கியச் சொல்

அ) இயற் சொல் ஆ) திசைச் சொல் இ) வட சொல் ஈ) திரி சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்

அ) சேவியர் ஆ) வரதன் இ) மயில்வாகனன் ஈ) தேவநேசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வெள்ளை அடித்தான் என்பது

அ) பொருளாகுபெயர் ஆ) சினையாகுபெயர்

இ) குணவாகுபெயர் ஈ) இடவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வகுப்பறையில் இருக்கைகள் உள்ளன. இதில் வந்துள்ள வேற்றுமை

அ) 4ம் வேற்றுமை ஆ) 5ம் வேற்றுமை இ) 2ம் வேற்றுமை ஈ) 7ம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. நித்திலம் என்ற சொல் குறிப்பது.

அ) முத்து ஆ) பவளம் இ) இரத்தினம் ஈ) வைரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பாடினான் என்பதில் வந்துள்ள இடைநிலை

அ) ன் ஆ) இன் இ) த் ஈ) தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பின்வருவனவற்றுள் குறிப்பு வினை

அ) நெடியோன் ஆ) வந்தான் இ) போனது ஈ) பறக்கின்றது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. காத்திருந்து ஏமாறுவதைக் குறிக்கும் உவமைத் தொடர்

அ) நீர் மேல் குமிழி போல ஆ) கிணற்றுத்தவளை போல

இ) இலவு காத்த கிளி போல ஈ) அணை கடந்த வெள்ளம் போல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. நிறையுணவை உண்பது சாலச் சிறந்தது. இதில் சால என்பது

அ) உரிச்சொல் ஆ) இடைச்சொல் இ) பெயர்ச்சொல் ஈ) பகுசொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடின் தூற்றுபவர்

அ) புலவர் ஆ) உழவர் இ) செல்வர் ஈ) வீரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு

அ) அவன் ஆ) அப்பையன் இ) இப்பெட்டி ஈ) உவ்வீடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உறுதுணையாக நின்று உதவுதல் என்பதன் மரபுத்தொடர்.

அ) கால்பிடித்தல் ஆ) தோள் கொடுத்தல்

இ) ஆழம் பார்த்தல் ஈ) ஒற்றைக் காலில் நிற்றல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சுவை, ஒளி, ஊறு ஓசை, நாற்றம் என்பன

அ) ஐம்பொறி ஆ) ஐம்பூதம் இ) ஐந்திலக்கணம் ஈ) ஐம்புலன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சங்கிலியனுக்கு உதவி செய்த தஞ்சைப் படைத் தளபதி

அ) வர்ணகுலம் ஆ) வன்னியத்தேவன்

இ) வீரபாண்டியகட்டப்பொம்மன் ஈ) மருதுபாண்டியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பீங்கான் என்ற சொல்

அ) ஆங்கிலச் சொல் ஆ) தமிழ்ச் சொல்

இ) போர்த்துக்கேயச் சொல் ஈ) ஒல்லாந்துச் சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கடுகு சிறிது காரம் பெரிது. இப் பழமொழி குறித்து நிற்பது,

அ) எல்லை கடத்தல் ஆ) அறிவின் அடக்கம்

இ) சிறிதெனினும் சிறப்புண்டு ஈ) விடாப்பிடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

மலர்நிறைந்த பொய்கையும் விண் மீன் நிறைந்த வானமும் கவிஞர் மனதைக் கவரும். கவிஞர் எப்பொழுதும் இயற்கைக் காட்சிகளைத் தமது இலக்கியங்களில் தமக்கேற்ற வகையில் பொருத்தி அழகுறக் கவிதை எழுதுவர். காலையிலே தோன்றும் கதிரவனொளியால் களித்து விரியும் தாமரையைக் காணும் பொழுது கவிஞரின் உள்ளமும் மலரும். இத்தகைய இயற்கை அழகைக் கண்டு தானும் இன்புறுவர். எங்களையும் இன்புறச் செய்வர். நீலத்திரை விரிந்த வானத்திலே கதிரவன் ஒளிவீசி எழுகிறான். கண்களைக் கவரும் அழகு வாய்ந்த தாமரை மலர்களில் தேனுண்டு களிக்க வந்த வண்டுகள் பொய்கை மீது சுற்றிச் சுழன்று இன்னிசை பாடுகின்றன. தாமரை மலரில் வெள்ளை அன்னம் ஒன்று இனிதாக அமர்ந்திருக்கிறது. காலைப்பொழுதில் வீசிய இளங்காற்றின் இனிமையை நுகர்ந்த அன்னம் பொய்கையின் அலைக்கைகள் தாலாட்டத் தாமரைப் பள்ளியில் இனிது துயில் கொள்கிறது. அன்பான குழந்தையைத் தாய் தன் மடியில் வைத்துத் தாலாட்டுவது போல் பொய்கை தன் அலைக்கைகளினால் அன்னத்தைத் தலாட்டுகிறது என்கிறார் கவிஞர். இது எவ்வளவு பொருத்தமான உவமையாக அமைந்திருக்கிறது.

1. இன்னிசை பாடுவன எவை?

______________________________

______________________________

2. காலையில் தோன்றும் கதிரவன் ஒளியில் களித்து விரிவது எது?

______________________________

______________________________

3. கவிஞரின் மனதைக் கவருவன எவை?

______________________________

______________________________

4. தாமரை மலரில் அமர்ந்திருப்பது எது?

______________________________

5. அலைக்கைகளால் அன்னத்தைத் தாலாட்டுவது எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாழிக்காடு எது? அது எப்பகுதியில் உள்ளது?

______________________________________________

______________________________________________

2. "வாழ்கிறேன் அம்மா வீரனாக" இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

______________________________________________

______________________________________________

3. இலங்கையில் இயக்கர், நாகரின் அரசுகள் இருந்த இடங்கள் எவை?

______________________________________________

______________________________________________

4. தமிழாராய்ச்சி மன்றம், தமிழர் பண்பாட்டுக்கழகம் என்பவற்றைத் தோற்றுவித்த தமிழ் அறிஞன் யார்?

______________________________________________

______________________________________________

5. சங்கிலியன் "வெட்கப்படுகின்றேனடா நான்" என்று காக்கைவன்னியனிடம் ஏன் கூறினான்?

______________________________________________

______________________________________________

6. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு
இக் குறளின் பொருளைத் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

7. எந்தப் பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு மகாவம்சம் எழுதப்பட்டது?

______________________________________________

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

*தரைமேல் பிறக்க வைத்தான் - எங்களைத்*
*தண்ணீரில் பிழைக்க வைத்தான்*
*கரைமேல் இருக்க வைத்தான் - பெண்களைக்*
*கண்ணீரில் குளிக்க வைத்தான்*

*கட்டிய மனைவி தொட்டில் பிள்ளை*
*உறவைக் கொடுத்தவர் அங்கே*
*அலைகடல் மேலே அலையாய் அலைந்து*
*உயிரைக் கொடுப்பவர் இங்கே*

*வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்*
*கடல்தான் எங்கள் வீடு*
*முடிந்தால் முடியும் தொடர்ந்தால் தொடரும்*
*இது தான் எங்கள் வாழ்க்கை*

*கடல் நீர் நடுவே பயணம் போனால்*
*குடி நீர் தருபவர் யாரோ?*
*தனியாய் வந்தோர் துணிவைத் தவிர*
*துணையாய் வருபவர் யாரோ?*

*ஒருநாள் போவார் ஒருநாள் வருவார்*
*ஒவ்வொரு நாளும் துயரம்*
*ஒரு சாண் வயிற்றை வளர்ப்பவர் உயிரை*
*ஊரார் நினைப்பது சுலபம்*

***கவிஞர் கண்ணதாசன்***

1. இப்பாடலில் வரும் தொழில் எது?

______________________________

______________________________

2. ஊரார் எதைச் சுலபமாக நினைப்பதாகக் கூறப்படுகிறது?

______________________________

______________________________

3. கண்ணீரில் குளிப்பவர் யார்?

______________________________

______________________________

4. மீனவர்களுக்கு விளக்காய் எரிவது எது?

______________________________

______________________________

5. இப்பாடலில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. வேற்றுமைகள் எத்தனை? முதலாம், எட்டாம், வேற்றுமைகளுக்கு எடுத்துக் காட்டுகள் தருக.

______________________________

______________________________

______________________________

2. தரப்பட்டுள்ள மரபுத் தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் தருக.

அ) தன்னந்தனியே

______________________________

______________________________

ஆ) நோய்நொடி

______________________________

______________________________

3. வினாவெழுத்துகள் எத்தனை? மொழிக்கு முதலில் **மட்டும்** வரும் வினா எழுத்துகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

______________________________

4. ஒற்றுமையே நனி சிறந்தது. இச் சொல்லியத்தின் பெயர்ச்சொல், வினைச்சொல், உரிச்சொல் என்பவற்றைத் தருக.

அ) பெயர்ச்சொல் ______________

ஆ) வினைச்சொல் ______________

இ) உரிச்சொல் ______________

5. அ, இ, உ, எ, ஒ, ஐ என்ற உயிர் எழுத்துகளின் இன எழுத்துகளைத் தருக.

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Heute ist ein Brief aus Italien angekommen. Es ist ein Brief von Ezhilan's Onkel (jüngerer Bruder von dem Vater). Ezhilan hatte diesen mit Freude durchgelesen. Der Onkel hatte sich nach dem Wohlbefinden aller erkundet. Dies hatte Ezhilan sehr erfreut. Zudem schrieb er, dass er in den Sommerferien Ezhilan bei ihm Zuhause besuchen komme. Ezhilan berichtete seinen Eltern von dem angekündigten Besuch des Onkels und freute sich.

Vandaag ontving ik een brief uit Italië, de brief was afkomstig van Elilan's oom. Elilan las deze brief met veel plezier. In de brief vroeg oom hoe het met iedereen gaat. Elilan vond het leuk dat hij daar naar vroeg. Oom schreef dat hij in de zomervakantie naar hem toe zou komen. Elilan vertelde dit met blijdschap aan zijn ouders.

Oggi è arrivata una lettera dall'Italia. Questa è la lettera dello zio di Ezhelan. Ezhelan l'ha letta con felicita'. Lo zio ha chiesto di tutti nella lettera. Cio' ha reso felice Alelan.Lo zio ha scritto anche che per le vacanze estive verra' a casa di Ezhelan. Ezhelan lo ha comunicato con felicita' ai suoi genitori.

I dag kom der et brev fra Italien. Det er fra Elilans onkel. Elilan læste det glad. Onkel spurgte efter alle. Det glædede Elilan. Han skrev også, at han kommer hjem til Elilan til sommerferie. Elilan fortalte glædeligt sine forældre, at hans onkel kommer.

Idag kom ett brev från Italia. Det är Elilans farbrors brev. Elilan läste det med glädje. Farbror frågade om alla i sitt brev. Det var väldigt glädjande för Elilan. Han skrev även att han ska komma hem till Elilan under sommarlovet. Elilan berättade med glädje till sina föräldrar att farbror kommer på besök.

Aujourd'hui, une lettre provenant de l'Italie est arrivée. C'est une lettre de l'oncle d' Elilan. Il lu cette lettre avec plaisir. Celui ci se renseigne sur toute la famille. Ce qui a rendu Elilan heureux. Il a écrit pour informer qu'il viendra pour les vacances d'été. Elilan prévient ses parents avec anthousiasme que son oncle va venir leur rendre visite.

There came a letter from Itlaly today. It was from Elilan's uncle .Elilan read the letter happily. His uncle wrote inquiring about everybody. Elilan was happy about that. He wrote that he will be coming to Elilan's house during the summer holidays. Elilan told his parents about his uncle's intention to come.

I dag kom det et brev fra Italia. Den er fra elillan's onkel(lillebroren til faren). Elillan leste brevet med stor gleden. Onkelen spurte om det går bra med alle og det likte elillan. Han skrev at han skal komme til elillan i ferien. Elillan sa det til foreldre og ble veldig glad for onkelens besøk.

புள்ளிகள் 05

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- தாயின் தாலாட்டு என்ற கதையை உமது உரை நடையில் எழுதுக.
- வெற்றியும் தோல்வியும்
- வாழிடப் பள்ளியும் தமிழ்ப் பள்ளியும்

புள்ளிகள் 20